உ

# செந்தமிழ் மாலை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 AUG 1929
MADRAS

ஆக்கியோர்,

R. P. சேதுப்பிள்ளை,

பி. ஏ., பி. யல்.

...னியா பிரஸ், திருநெல்வேலி.

[விலை அணா மூன்று

O-1MSH,C
N29
142041

உ

2808
874s11

# செந்தமிழ் மாலை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 AUG 1929
MADRAS

ஆக்கியோர்,
R. P. சேதுப்பிள்ளை,
பி. ஏ., பி. யல்.

மீரானியா பிரஸ், திருநெல்வேலி.

All Rights Reserved] [விலை அணா மூன்று

# செந்தமிழ் மாலை.

## முன்னுரை.

அமிழ்தினும் இனிய தமிழ் மணம் கமழும் இத் திரு நாட்டில், தாய் மொழி அன்புதழைக்க வேண்டுமாயின் இளம்பருவத்தில் கல்வி கற்கும் மாணவர்க்கு இன் தமிழ்ச் சுவையை ஊட்டுதல் இன்றியமையாததாகும். இந்நோக்கத்தோடு செந்தமிழ்த்தேன் சொரியும் சிலப்பதிகாரம், மீனாட்சியம்மை குறம், குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற் பள், கலிங்கத்துப்பரணி, இராமலிங்க அடிகள் அருட்பா, முதலிய நூல்களினின்றும் சிந்தைக்கும் செவிக்கும் இனிய சில செஞ்சொற் கவிகளைத் தொடுத்து 'செந்தமிழ்மாலை' என்னும் பெயரால் இச்சிறு நூலை வெளியிட்டுள்ளேன். தமிழ் மணம் வீசும் தனிப்பூஞ்சோலையில் அன்புடன் கொய்த அருமலர்களாலாய இப்பாமாலையை இளைஞர் புனைந்து இன்புறவேண்டுகிறேன்.

1—7—29.

R. P. சேதுப்பிள்ளை.

# செந்தமிழ் மாலை.

## தமிழ்த் தெய்வம்.

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழில் ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
[தமிழ் அணங்கே. 1.

## பொதியமலைப் பாட்டு

திங்கள்முடி சூடுமலை : தென்றல்விளை யாடுமலை
தங்கு முயல் சூழுமலை : தமிழ் முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு அருள் சுரந்து பொழிவதென
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே 2.

மந்தமா ருதம்வளரும் மலை எங்கள் மலையே
வடகலை தென்கலை பயிலும் மலை எங்கள் மலையே
கந்தவேள் விளையாடும் மலை எங்கள் மலையே
கனக நவ மணி விளையும் மலை எங்கள் மலையே
இந்த மாநிலம் புரக்கும் அங்கயற் கண் அம்மை
இன்ப முறும் தென் பொதிய மலை எங்கள் மலையே. 3.

சிங்கமும் வெங்களிறும் உடன் விளையாடும் ஒருபால்
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடும் அங் கொருபால்
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்
விட அரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்

அங்கண் அமர் நிலம் கவிக்கும் வெண்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி சூடும் எங்கள் அபிடேக வல்லி
செங்கமலப் பதம் பரவும் கும்பமுனி பயிலும்
தென் பொதியமலை காண் மற்றெங்கள்மலை அம்மே. 4.

கொழுங்கொடியின் விழுந்த வள்ளிக் கிழங்கு கல்லி [எடுப்போம்
குறிஞ்சி மலர் எடுத்து முல்லைக் கொடியில் வைத்துத் [தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும் தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும் இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறும் தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற் கண் படுப்போம்
எழுந்து கயற்கணி காலில் விழுந்துவினை கெடுப்போம்
எங்கள் குறக் குடிக் கடுத்த இயல்பிது காண் அம்மே 5.

புல்வாயின் பார்வையைவெம் புலிப்பார்வை இணங்கும்
புதுத்தினைகல் உரல்பாறை முன்றில்தொறும் உணங்கும்
கல்விடரில் வரிவேங்கை கடமானோடு உறங்கும்
கருமலையில் வெள் அருவி கறங்கிவழிந் திறங்கும்
சில்வலையும் பல்வாரும் முன் இறப்பில் தூங்கும்
சிறுதுடியும் பெருமுரசும் திசைதொறும் நின்றேங்கும்
கொல்லையில் மான் பிணையும் இளம் பிடியும்விளை யாடும்
குறிச்சி எங்கள் குறச்சாதி குடியிருப்ப தம்மே 6.

பொற்றொடி வள்ளிக்கிளைய பூங்கொடி என் பாட்டி
பூமகள் மா யவன் மார்பில் பொலிவள் என்று சொன்னாள்
மற்றவள் பெண்களில் எங்கள் பெரியதாய் கலைமான்
மலர் அயனார் திருநாவில் வாழ்வள் என்று சொன்னாள்
பெற்ற எங்கள் நற்றாயும் சுந்தரி இந் திரன் தோள்
பெறும் என்றாள் பின் எங்கள் சிறியதாய் அம்மே

சொற்ற குறிக் களவிலை என் கன்னிமார் அறியச்
சொன்னேன் பொய் யல நாங்கள் சொன்னது
[சொன்னதுவே. 7.

முன்னொரு நாள் அம்மைதடா தகைபிறந்த நாளில்
முகக் குறிகண் டிவள் உலக முழுதாளு மென்றேன்
பின்னொருநாள் கைக்குறி பார்த் தம்மை யுனக்கெங்கள்
பிஞ்ஞுக்ர்தாம் மணவாளப் பிள்ளை யென்று சொன்னேன்
அன்னை யவள் மெய்க்குறிகள் அனைத்தையும் பார்த்
[துனக்கோர்
ஆண்பிள்ளை உண்டுபிறந் தரசாளு மென்றேன்
சொன்ன குறி யெல்லாமென் சொற்படியே பலிக்கும்
தொகுத்து நீ நினைந்தகுறி இனிச் சொலக்கேளம்மே. 8.

## செந்தமிழ் நாடு.

தக்க பூமிக்கு முன்புள்ள நாடு
சகல தேவர்க்கும் அன்புள்ள நாடு
திக்கெ லாம்வளர்ந் தோங்கிய நாடு
சிவத்து ரோகமும் நீங்கிய நாடு
முக்க ணன்விளை யாடிய நாடு
முதிய நான்மறை பாடிய நாடு
மைக்க ணள்குழல் வாய்மொழி பாகர்
வசந்த ஆரிய நாடெங்கள் நாடே. 9.

மாத மூன்று மழையுள்ள நாடு
வருட மூன்று விளைவுள்ள நாடு
வேத மூன்றும் பலாவுள்ள நாடு
விசேஷ மூன்றும் குலாவுள்ள நாடு
போத மூன்றும் நலம்செயும் நாடு
புவனம் மூன்றும் வலம் செயும் நாடு

நாத மூன்றுரு வான குற் றால
நாதர் ஆரிய நாடெங்கள் நாடே. 10.

சூழ மேதி இறங்கும் துறையில்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினில் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையில் சாய
வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க
வருவி ருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடும்
சந்த்ர சூடர்தென் ஆரிய நாடே. 11.

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுஙகக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற் றாலர்தென் ஆரிய நாடே 12.

நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சுழலக் காண்பது பூந்தயிர் மத்து
ஏங்கக் காண்பது மங்கல பேரிகை
ஈசர் ஆரிய நாடெங்கள் நாடே. 13.

மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு

நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவோ மிஃதை எமக்கில்லை ஈடே. 14.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே—எங்கள் (செந்தமிழ்) 15.

காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி—யென
மேவிய ஆறு பல ஓடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு (செந்தமிழ்) 16.

முத்தமிழ் மாமுனி நீள்வரையே—நின்று
மொய்ம் புறக் காக்கும் தமிழ்நாடு—செல்வம்
எத்தனையுண்டு புவி மீதே—அவை
யாவும் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்) 17.

நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு (செந்தமிழ்) 18.

கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு (செந்தமிழ்) 19.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ் நாடு (செந்தமிழ்) 20.

---

## குற்றாலப் பாட்டு.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
கவனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே. 21.

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்
செழுங் குரங்கு தேமாவின் பழங்களைப் பந் தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவில் ஈசர்
வளம்பெருகும் திரிகூட மலைஎங்கள் மலையே. 22.

ஆடும்அர வீனுமணி கோடிவெயில் எறிக்கும்
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்
வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனம் தோறும்
விந்தை அகில் குங்குமமும் சந்தனமும் நாறும்

காடுதோறும் ஓடிவரை ஆடுகுதி பாயும்
 காகமணு காமலையில் மேகநிரை சாயும்
நீடுபல ஈசர்கயி லாசகிரி வாசர்
 நிலைதங்கும் திரிகூட மலையெங்கள் மலையே. 23.

கயிலையெனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே
 கனகமகா மேருவென நிற்குமலை அம்மே
சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே
 சகலமலை யும்தனக்குள் அடக்குமலை அம்மே
வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே
 வான்இரவி முழைகள்தோறும் நுழையுமலை அம்மே
துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும்
 துங்கர்திரி கூடமலை எங்கள்மலை அம்மே 24.

கொல்லிமலை எனக்கு இளைய செல்லிமலை அம்மே
 கொழுநனுக்குக் காணிமலை பழனிமலை அம்மே
எல்உலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே
 இமயமலை என்னுடைய தமயன்மலை அம்மே
சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே
 தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே
செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்
 திரிகூட மலையெங்கள் செல்வமலை அம்மே. 25.

ஞானிகளும் அறியார்கள் சித்ர நதி மூலம்
 நானறிந்த வகைசிறிது பேசக்கேள் அம்மே
மேன்மை பெறும் திரிகூடத் தேனருவித் துறைக்கே
 மேவுமொரு சிவலிங்கம் தேவரக சியமாய்
ஆனதுறை அயனுரைத்த தானமறி யாமல்
 அருந்தவத்துக் காய்த்தேடித் திரிந்தலையும் காலம்

மோனவா னவர்க்கெங்கள் கானவர்கள் காட்டும்
முதுகங்கை ஆறுசிவ மதுகங்கை யாறே. 26.

சிவமது கங்கையின் மகிமை புவனமெங்கும் புகழும்
செண்பகா டவித் துறையின் பண்பு சொல்லக் கேளாய்
தவமுனிவர் கூட்டரவும் அவரிருக்கும் குகையும்
சஞ்சீவி முதலான விஞ்சைமூ லிகையும்
கவன சித்தர் ஆதியரும் மவுனயோ கியரும்
கத்திருக்கும் கயிலாயம் ஒத்திருக்கும் அம்மே
நவநிதியும் விளையுமிடம் அவிடமது கலந்தால்
நங்கைமார் குரவை யொலிப் பொங்குமா கடலே. 27.

பொங்குகடல் திரிவேணி சங்கமெனச் செழிக்கும்
பொருந்து சித்ர நதித் துறைகள் பொன்னு முத்தும்
[கொழிக்கும்
கங்கையெனும் வடஅருவி தங்கும் இந்த்ர சாபம்
கலந்தாடிற் கழுநீராய்த் தொலைந் தோடும் பாபம்
சங்கவீ தியிற்பரந்து சங்கினங்கள் மேயும்
தழைத்தமதில் சிகர மெங்கும் கொழுத்தகயல் பாயும்
கொங்கலர்செண் பகச்சோலைக் குறும்பலா வீசர்
குற்றாலத் திரிகூடத் தலமெங்கள் தலமே. 28.

---

## குறவன் குறத்தி கூற்று

இத்தனை நாளாக என்னுடன் சொல்லாமல்
எங்கே நடந்தாய் நீ சிங்கி (எங்கே நடந்தாய் நீ) 29.

கொத்தார் குழலார்க்கு வித்தாரமாகக்
குறிசொல்லப் போனனடா சிங்கா
(குறிசொல்லப்போனனடா) 30.

பார்க்கில் அதிசயம் தோணுது சொல்லப்
பயமா யிருக்குதடி சிங்கி (பயமா) 31.

ஆர்க்கும் பயமில்லைத் தோணின காரியம்
அஞ்சாமற் சொல்லடா சிங்கா (அஞ்சா) 32.

வள்ளிக்கொடியிலே துத்திப்பூப்பூப்பானேன் சிங்கி-காதில்
வங்காளத் தாரிட்ட சிங்காரக் கொப்படா சிங்கா. 33.

வன்னக் குமிழிலே புன்னை அரும்பேது சிங்கி—மண்ணில்
முந்நீர்ச் சலாபத்து முத்துமூக் குத்திகாண் சிங்கா. 34.

பொன்னிட்ட மேலெல்லாம் மின்வெட்டிப் பார்ப்பானேன்
சிங்கி—இந்த
வன்னப் பணிகளின் மாணிக்கக் கல்லடா சிங்கா. 35.

இந்தப்பணியை நீ பூணப் பொறுக்குமோ சிங்கி—பூவில்
ஈசர்க்கும் நல்லார்க்கும் எல்லாம் பொறுக்கும் காண்
சிங்கா. 36.

இல்லாத சுற்றெல்லாம் எங்கே படித்தாய் நீ சிங்கி—நாட்டில்
நல்லாரைக் காண்பவர்க் கெல்லாம் வருமடா சிங்கா. 37.

---

## முல்லைப் பாட்டு.

மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்இலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே. 38.

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே, 39

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்து ஆரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணாவென்னா நாவென்ன நாவே. (40)

---

அம்மானைப் பாட்டு.

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணம் காத்த உரவோன்யார் அம்மானை
ஓங்கரணம் காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்று எறிந்த சோழன்காண் அம்மானை
சோழன்பு கார்நகரம் பாடேலோர் அம்மானை. 41.

புறவுநிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பு அரிந்த கொற்றவன்யார் அம்மானை
குறைவில் உடம்பு அரிந்த கொற்றவன் முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை. 42.

கடவரைகள் ஓரெட்டும் கண்ணிமையார் காண
வடவரைமேல் வாள்வேங்கை ஏற்றினன்யார் அம்மானை
வடவரைமேல் வாள்வேங்கை ஏற்றினன் திக்கெட்டும்
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்காண் அம்மானை
கொற்றவன்தன் பூப்புகார் பாடேலோ ரம்மானை 43.

பந்தடிப் பாட்டு.

பொன் இலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்விட
மின்னி லங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னவன் வாழ்க வாழ்கஎன்று சென்றுபந்த டித்துமே
தேவர்ஆர மார்பன்வாழ்க என்றுபந்த டித்துமே. 44.

பின்னு முன்னும் எங்கணும்பெ யர்ந்துவந்தெ ழுந்துலாய்
மின்னு மின்இ ளங்கொடி வியன்நிலத்தி ழிந்தெனத்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்றுபந்த டித்துமே
தேவர்ஆர மார்பன்வாழ்க என்றுபந்த டித்துமே. 45.

துன்னிவந்து கைத்தலத்தி ருந்ததில்லை நீணிலம்
தன்னி னின்றும் அந்தரத்தெ ழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்கஎன்று சென்றுபந்த டித்துமே
தேவர்ஆர மார்பன்வாழ்க என்றுபந்த டித்துமே. 46.

வேறு

செங்கையில் வண்டு கலின் கலின்என்று செயம் செயம்
என்றாட — இடை
சங்கத மென்று சிலம்பு புலம்பொடு தண்டை
கலந்தாட
சூடக முன்கையில் வால்வளை கண்டிரு தோள்வளை
நின்றாடப் — புனை
பாடக முஞ்சிறு பாதமும் அங்கொரு பாவனை
கொண்டாட — நய
நாடகம் ஆடிய தோகை மயிலென நன்நகர்
வீதியிலே — அணி
ஆடக வல்லி வசந்த ஒய்யாரி
அடர்ந்துபந் தாடினளே. 47.

பொங்கு கனங்குழை மண்டிய கெண்டை புரண்டு
புரண்டாட — குழல்
மங்குலில் வண்டு கலந்தது கண்டு மதன்சிலை
வண்டோட — இனி
இங்கிது கண்டுல கென்படும் என்படும் என்றிடை
திண்டாட — மலர்
பங்கய மங்கை வசந்த சவுந்தரி
பந்து — பயின்றாளே. 48.

இந்திரையோ இவள் சுந்தரி யோதெய்வ ரம்பையோ
மோகினியோ — மன
முந்தியதோவிழி முந்திய தோகர முந்திய
தோவெனவே — உயர்
சந்திர சூடர் குறும்பல ஈசுரர் சங்கணி
வீதியிலே — மணிப்
பைந்தொடி நாரி வசந்த ஒய்யாரி பொற்
பந்துகொண் — டாடினளே. 49.

வேறு.

மாறாமல் இருநிலத்தில் அறம்வளர்க்கும் கையே
மனைஅறத்தால் அறம்பெருக்கித் திறம்வளர்க்கும்
வீறாக நவநிதியும் விளையும் இந்தக் கையே [கையே
மேன்மேலும் பால்அமுதம் அளையும்இந்தக் கையே
ஆறாத சனங்கள் பசி ஆற்றும்இந்தக் கையே
அணங்கனையார் வணங்கிநித்தம் போற்றும்இந்தக்
பேறாக நன்நகரம் காக்கும்இந்தக் கையே [கையே
பிறவாத நெறியார்க்கே ஏற்கும்இந்தக் கையே. 50.

## ஊஞ்சல் பாட்டு.

ஓரைவர் ஈரைம் பதின்மர்உடன் றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றுது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம் பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல் 51.

வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
தென்குமரி ஆண்ட செருவில் கயற்புலியான்
மன்பதை காக்கும்கோமான் மன்னன் திறம்பாடி
மின்செய் இடை நுடங்க வாடாமோ ஊசல்
விறல்விற் பொறிபாடி யாடாமோ ஊசல். 52.

## பொன்னிப் பாட்டு.

உழவர் ஓதை மதகோதை யுடைநீர் ஓதை தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவர் ஓதை சிறந்துஆர்ப்ப நடந்தெல்லாம் வாய்காவா
மழவர் ஓதை வளவன்தன் வளனே வாழி காவேரி. 53.

மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப மணிப்பூ வாடை அது
போர்த்துக்
கருங்க யற்கண் விழித்துஒல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்த தெல்லாம் நின்
கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி
காவேரி. 54.

பூவார் சோலை மயில் ஆடப் புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை அருகுஅசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை அருகுஅசைய நடந்தெல்லா நின் கணவன்
நாம வேலின் திறம்கண்டே அறிந்தேன் வாழி காவேரி 55

வாழியவன் தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழிஉய்க்கும் பேர்உதவி ஒழியாய் வாழி காவேரி
ஊழிஉய்க்கும் பேர்உதவி ஒழியாது ஒழிதல் உயிர்ஓம்பும்
ஆழி ஆள்வான் பகல்வெய்யோன் அருளே வாழி காவேரி. 56

## பூப் பாட்டு.

நாக நாறும் நரந்தை நிரந்தன
ஆவு மாரமு மோங்கின வெங்கணும்
சேவு மாவும் செறிந்தன கண்ணுதல்
பாக மாளுடை யாள்பலி முன்றிலே 57.

செம்பொன் வேங்கை சொரிந்தன சேயிதழ்
கொம்பர் நல்இல வங்கள் குவிந்தன
பொங்கர் வெண்பொரி சிந்தின புன்குஇளம்
திங்கள் வாழ்சடை யாள்திரு முன்றிலே. 58.

மரவம் பாதிரி புன்னை மணங் கமழ்
குரவம் கோங்க மலர்ந்தன கொம்பர்மேல்
அரவ வண்டின மார்த்துடன் யாழ்செயும்
திருவ மாற்கிளை யாள்திரு முன்றிலே. 59.

## மழைப் பாட்டு.

ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறி—மலை
ஆழமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே—கேணி
நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றைக்கிள்ளி ஏற்றடைக்குதே—மழை
தேடி யொரு கோடிவானம் பாடியாடுதே
போற்றுதிரு மாலழகர்க் கேற்றமாம் பண்ணைப்
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடி துள்ளிக்கொள்ளுமே. 60

149064

மேகமெல்லாம் ஒன்றாய்க்கூடி தான்கலக்குதே—மெத்த
மின்னல் மின்னி வாசவன்கை வில்லெடுக்குதே
நாகரிகப் பொதியமலைக் காற்றடிக்குதே—கொண்டல்
நாலுதிக்கும் கோடைஇடி தானிடிக்குதே
ஏகபோக மாமரத்தில் குயில்கள் கூவுதே—மழைக்
கேற்றமாம் சொரித்தவளை கூப்பிடுகுதே
ஆகையினால் எங்கள் திருக் கூடல் நகரில்
அந்தி நேரமெல்லாம் மழை வந்து பெய்யுமே. 61

G-IMSH/C N29

வேறு

காவுக்கிறைவனாகும்இந்திரன் ஏவல்பணி கொண்
டெழுந்த கார்
கடலிற்படிந்து திருவில் கோட்டி அடல் முக்கூடல்
அரியுமாய்
பூவிற்பொலியும் கலைமின்னோடு மேவிக் கமலத்
தயனுமாய்ப்
புனலைத்தரித்து வரையிலேறிக் கனலைத் தரித்த
சிவனுமாய்த்
தாவிப்பறந்து பணிகள்பதுங்கக் கோவித்தெழுந்த
கருடனும்
தானேயாகி உலகுக்குரிமை ஊனேயாகி உயிருமாய்
கோவிற்பெரிய வடமலேந்திரன் மாவிற் கறுத்துப்
பொழிந்த பின்
குளிருகின்றது கோன்கழுத்தினில் வெளிறுகின்றது
வானமே. 62.

குற்றாலத்திரிகூடமால்வரை உற்றே மேகம்பொழிந்த நீர்
கூடிப்பொருனை நாடித்திருமுக் கூடற்பதியை வலங்கொண்டே
வற்றா மடுவில் பரவை குரவை வாளை கோலை தேளிமீன்
மயிந்தி உளுவை பயிந்தி கூனி மணலி ஆரால் ஓராமீன்

பற்று அசனா மசனா தெளிறு பருவிராலும் அணையிலே
பாயக்காலில் பாயக் குளத்தில் பாயவயலில் பாயவே
சிற்றுறென்பது பெற்றுலும் ஒரு சிறியவர் மனப் பெருமை போல்
சித்ரா நன்னதி பெருகிவார சித்ரம் பாரும் பள்ளிரே. 63

## மருதப் பாட்டு.

காயக் கண்டது சூரிய காந்தி
கலங்கக் கண்டது வெண்டயிர்க் கண்டம்
மாயக் கண்டது நாழிகை வாரம்
மருகக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்
தனிப்பக் கண்டது தாபதர் உள்ளம்
தேயக்கண்டது உரைத்திடும் சந்தம்
சீவலா மங்கைத் தென்கரை நாடே. 64.

கறை பட்டுள்ளது வெண்கலைத் திங்கள்
கடம்பட் டுள்ளது கம்பத்து வேழம்
சிறை பட்டுள்ளது விண்ணெழும் புள்ளு
திரிபட் டுள்ளது நெய்படும் தீபம்
குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி
குழைபட் டுள்ளது வல்லியங் கொம்பு
மறைபட் டுள்ளது அரும்பதச் செய்யுள்
வளமை யாசூர் வடகரை நாடே. 65.

மீதுயர்ந் திடு தெங்கிள நீரை
மிடைந்த பூகம் சுமந்து தன் காயைச்
சூதமொன்று சுமக்கக் கொடுக்கும்
சூதின் தன்கனி தூங்கும் பலாவில்

ஓதும் அந்தப் பலாக்கனி வாழை
        உளுக்கவே சுமந் தொண்குலை சாய்க்கும்
மாதுளங் கொம்பு வாழையைத் தாங்கும்
        வளமை யாகூர் வடகரை நாடே. 66.

பங்கயம் தலைநீட்டிக் குரம்பினிற்
        பச்சை இஞ்சியின் பாசடை தீண்டும்
தங்கும் இஞ்சியின் மஞ்சள் கழுத்தைத்
        தடவிமெள் ளத்தொடும அந்த மஞ்சள்
அங்கசைந்திடும் காய்கதிர்ச் செந்நெல்
        அளாவி நிற்கும்அச் செந்நெலுக் கப்பால்
செங்கரும் புக்குக் கைதரும் போல்வளர்
        சிவலா மங்கைத் தென்கரை நாடே. 67.

கொண்டல் கோபுர மண்டையிற் கூடும்
        கொடிகள் வானம் படிதர மூடும்
கண்டபே ரண்டம் தண்டலை நாடும்
        கனக முன்றில் அனம் விளையாடும்
விண்ட பூமது வண்டவிட் டோடும்
        வெயில்வெய் யோன் பொன் எயில்வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
        அழகர் முக்கூடல் ஊர் எங்கள் ஊரே. 68.

சங்க மேடைகள் எங்கும் உலாவும்
        தரங்க மீன் பொன் அரங்கிடை தாவும்
திங்கள் சோலை மரங்களி ராவும்
        தெருக்கள் தோறும் மருக்களைத் தூவும்
பொங்கர் ஊடிளம் பைங்கிளி மேவும்
        பூவை மாடப் புறாவினம் கூவும்
வங்க வாருதி வெங்கடு உண்ட
        மருதர் வாழ் மருதூர் எங்கள் ஊரே. 69.

வேறு.

வீறான முக்கூடல் விளங்கு பண்ணை உரமேத்த
மாறாமல் ஆடுகொண்டு வருவேன் காண் ஆண்டே 70.

தொழுது விடைகொண்டு நீர், சொன்னபடி ஆடுகொண்டு
பொழுது புகு முந்திவந்து புறப்படுவேன் ஆண்டே 71.

குட்டிகளும் கொண்டுசிறு குடில்களையும் கொண்டாட்டுப்
பட்டிகளும் கொண்டின்று பகல்வருவேன் ஆண்டே 72.

அழகர் திருவுளம்போல ஆண்டவற்கு மனதுவர
உழவு வயல் உள்ள தெல்லாம் உரம் வைப்பேன் ஆண்டே 73.

வேறு.

பள்ளன் எழுந்து நிலைதரித்தான் நின்ற
பள்ளியர்கள் முகம் பார்த்துச் சிரித்தான்
மெள்ளப் புருவம் கொட்டி நெரித்தான் மாட்டை
மீண்டும் பூட்டி உழத் தரித்தான் 74.

உழுத உழவைக் கண்டு களித்தான் பள்ளர்
உள்ள பேரை எல்லாம் விளித்தான்
தொழுது தெய்வக் கடன் கழித்தான் அந்த
தொழியில் விதைகள் எல்லாம் தெளித்தான் 75.

முளைத்த முளைக்குத் தண்ணீர் அடைத்தான் கொல்லை
முழுதும் மறுநாள் வெட்டி விடுத்தான்
வளைத்து வேலி சூழ நட்டான் நாற்று
வளர நாளும் எரு விட்டான் 76.

வளர்ந்த நாற்று முகம் கண்டான் சேரி
மள்ளர் கூட [illegible]

அளந்திடா மகிழ்ச்சி கொண்டான்—பண்ணை
ஆண்டவற்குச் செய்தி விண்டான் 77.

## நடுகைப் பாட்டு.

படைகொண்டே வரு கரனையும்—பொரு
விடையம் சேர்திரி சிரனையும்
பண்டு முடித்த கணையினர்—குகன்
கண்டு பிடித்த துணையினர்
குடை குன்றாய்ப் பசுக்கு இடை நின்றார்—முக்
கூடல் அழகர் வயலுள்ளே
கொண்டாடிக் கொண்டு நடச்செய்தே—இது
கண்டோமென்ன புதுமையே
தொடை என்றால் வாழைத் தண்டைப்போல்—விழிக்
கடை என்றால் கணை ரெண்டைப்போல்—தலைச்
சொருக்கென்றால் மேகத் தடுக்குப்போல்—பல்
நெருக்கென்றால் முல்லை அடுக்குப்போல்
இடை என்றால் வஞ்சிக் கொடியைப் போல்—வரு
நடை என்றால் இளம் பிடியைப் போல்
இருந்த சாயலுக் கிப்பால் குருந்தி
திருந்தினளடி பள்ளிரே 78.

கடிக்கும் அரவில் நடிக்கும் இறைவர்
கஞ்சனார்க் கொரு நஞ்சனார்
கடையும் அமுதை உடையும் திரையில்
காட்டி அண்டருக் கூட்டினார்
அடிக்குள் அடங்கும் படிக்கு முதல்வர்
அழகர் முக் கூடல் வயலுள்ளே
ஆடிப்பாடி நாற்று முடியை
அலைத்துக் குலைத்து நடச் செய்தே

வடிக்கு மதுவைக் குடிக்கு மாசி
மயக்கமும் பெருந் தியக்கமும்
வரம்பிற் பாய்ந்து பரம்பிற் சாய்ந்த
வாட்டமும் முகக் கோட்டமும்
துடிக்கும் இதழைக் கடிக்கும் எயிறும்
சோர்ந்து விரிந்த கூந்தலும்
தொடையும் நெகிழ்ந்த உடையும் கிடந்த
கிடையும் பாரும் பள்ளிரே 79.

புங்கவர் தமிழ்ச் சங்க மேறிய
புலமைத் தலைமை அழகனார்
பொருனை ஆற்றணை பெருகுங் காற்புனல்
பொருத மருதூர் வயலுளே
தங்கள் வேலை நாற்றுக்கும் பள்ளர்
அங்க லாய்க்கும் சோற்றுக்கும்
தாமதப்பட வே மதத் தொன்றைச்
சாட்டி மேட்டில் கூட்டமாய்
எங்கும் கார்ப்பொலி பொங்கவே அதற்
கெதிரச் சங்கிலி அதிரவே
இலங்கும் அணிகள் குலுங்கவே காதில்
இசையும் பணிகள் அசையவே
அங்கும் இங்கும் செங்கை நீட்டி
அருதியும் சின்ன மருதியும்
அரியாளும் கட்டைப் பெரியாளும் கும்மி
அடிப்பதைப் பாரும் பள்ளியரே. 80.

பாலைப் பாட்டு.

பொரிந்த காரை கரிந்த சூரை
புகைந்த வீரை எரிந்த வேல்

உரிந்த பாரை எரிந்த பாலை
உலர்ந்த ஓமை கலந்தவே 81.

உதிர்ந்த வெள்ளில் உணங்கு நெல்லி
ஒடுங்கு துள்ளி உலர்ந்த வேல்
பிதிர்ந்த முள்ளி சிதைந்த வள்ளி
பிளந்த கள்ளி பரந்தவே 82.

வற்றல் வாகை வறந்த கூகை
மடிந்த தேறு பொடிந்த வேல்
முற்றல் ஈகை முளிந்த விண்டு
முதிர்ந்த புன்கு நிரைந்தவே 83.

வேறு

வெடித்த கழை விசைதெறிப்பத் தரைமேல் முத்தம்
வீழ்ந்தன அத் தரைபுழுங்கி அழன்று மேன்மேல்
பொடித்த வியர்ப் புள்ளிகளே போலும் போலும்
போலாவேல் கொப்புளங்கள் போலும் போலும் 84.

முள்ளாறும் கல்லாறும் தென்னர் ஓட
முன்னொருநாள் வாளபயன் முனிந்த போரில்
வெள்ளாறும் கோட்டாறும் புகையால் மூட
வெந்த வனம் இந்த வனம் ஒக்கில் ஒக்கும் 85

வேறு

மதக்கரி மருப்பிற மதம் புலரு மாலோ
மடப்பிடி மருப் பெழ மதம் பொழியு மாலோ
கதிர்ச் சுடர் விளக்கொளி கறுத்தெரியு மாலோ
காலமுகில் செங்குருதி காலவரு மாலோ 86.

வார்முர சிருந்துவறி தேஅதிரு மாலோ
வந்திரவில் இந்திரவில் வானிவிடு மாலோ
ஓர் மனையில் ஊமன்எழ ஓரிஅழு மாலோ
ஓம எரி ஈமஎரி போலெரியு மாலோ 87.

பூவிரியு மாலைகள் புலால் கமழு மாலோ
பொன்செய்மணி மாலையொளி போயொழியு மாலோ
ஓவிய மெலாமுடல் வியர்ப்ப வரு மாலோ
ஊறுபுனல் செங்குருதி நாறவரு மாலோ 88.

## படைப் பாட்டு.

அலகில் கட்டழல் கனல் விரித்தலால்
அரிய பொற்பணிக் கலன் எறித்தலால்
இலகுகைப் படைக் கனல் விரித்தலால்
இருள் கரக்கவே ஒளி பரக்கவே. 89.

அகில வெற்பு மின்று ஆனையானவோ
அடைய மாருதம் புரவியானவோ
முகிலனைத்துமத் தேர்களானவோ
மூரி வேலை போர் வீர ரானவோ 90.

பார் சிறுத்தலிற் படை பெருத்தவோ
படை பெருத்தலில் பார் சிறுத்ததோ
நேர் செறுத்தவர்க் கரிது நிற்பிடம்
நெடு விசும்பலால் இடமு மில்லையே. 91.

## போர்ப் பாட்டு.

எடும் எடும் எடும்என எடுத்ததோர்
இகலொலி கடலொலி இகக்கவே
விடு விடு விடுபரி கரிக்குழாம்
விடும் விடும் எனும் ஒலி மிகைக்கவே. 92.

எறிகடலொடு கடல் கிடைத்த போல்
இருபடை களும் எதிர் கிடைக்கவே
மறிதிரை திரையொடு மலைத்த போல்
வருபரி.யொடு பரி மலைக்கவே. 93.

கனவரை யொடுவரை முனைத்த போல்
கடகரி யொடுகரி முனைக்கவே
இனமுகில் முகிலொடும் எதிர்த்தபோல்
இரதமும் இரதமும் எதிர்க்கவே. 94.

பொருபுலி புலியொடு சிலைத்தபோல்
பொருபட ரொடுபடர் சிலைக்கவே
அரியினொ டரியினம் அடர்ப்ப போல்
அரசரும் அரசரும் அடர்ப்பவே. 95.

விளைகனல் விழிகளின் முளைக்கவே
மினலொளி கனலிடை எறிக்கவே
வளைசிலை உருமென இடிக்கவே
வடிகணை யொடு மழை படைக்கவே. 96.

குருதியின் நதிவெளி பரக்கவே
குடையினம் நுரையென மிதக்கவே
கரிதுணி படுமுடல் அடுக்கியே
கரையென இருபுடை கிடக்கவே. 97.

போர்க்களப் பாட்டு.

விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே உண்ணப்
பதும முக மலர்ந்தாரைப் பார்மின் பார்மின். 98.

சாமளவும் பிறர்க்குதவா தவரை நச்சித்
தள்ளுநர் போல் வீரர்உடல் தரிக்கும் ஆவி
போமளவும் அவராருகே இருந்து விட்டுப்
போகாத நரிக்குலத்தின் புகழ்ச்சி காண்மின். 99

சாய்ந்துவிழும் கடகளிற்றின் உடனே சாய்ந்து
தடங் குருதி மிசைப்படியும் கொடிகள் தங்கள்
காந்தனுடன் கனல் அமளி அதன்மேல் வைகும்
கற்புடைமா தரைஒத்தல் காண்மின், காண்மின். 100.

தம் கணவருடன் தாமும் பேசா ரன்றே
சாதகரைக் கேட்பாரே தடவிப் பார்ப்பார்
எங்கணவன் கிடந்தவிட மெங்கே என்றென்று
இடாகினியைக் கேட்பாரைக் காண்மின் காண்மின். 101.

வாய்மடித்துக் கிடந்த தலை மகனைநோக்கி
மணிஅதரத்து ஏதேனும் வடுவுண் டாயோ
நீ மடித்துக் கிடந்த தெனப் புலவி கூர்ந்து
நின்றுவி சோர்வாளைக் காண்மின் காண்மின். 102.

பொருதடக்கை வாளெங்கே மார்பம் எங்கே
போர்முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோள் எங்கே எங்கே என்று
பயிர வியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின் 103.

வேறு

காதலற் காண்கிலேன் கலங்கி நோய் கைம்மிகும்
ஊதுலை தோற்க உயிர்க்கும் என் நெஞ்சன்றே
ஊதுலை தோற்க உயிர்க்கும் என் நெஞ்சாயின்
ஏதிலார் சொன்னது எவன்வாழி யோதோழீ. 104.

நன்பகற் போதே நடுக்கு நோய் கைம்மிடும்
அன்பனைக் காணாது அலறும் என் நெஞ்சன்றே
அன்பனைக் காணாது அலறும் என் நெஞ்சாயின்
மன்பதை சொன்னது எவன்வாழி யோதோழீ. 105.

தஞ்சமோ தோழீ தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ உண்டு மயங்கும் என் நெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு மயங்கும் என் நெஞ்சாயின்
நெஞ்சிலார் சொன்னது எவன்வாழி யோதோழீ. 106.

## தமிழ்மொழிப் பாட்டு.

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமம் அது தமிழர் எனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும். 107.

யாம் அறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங் கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை.
ஊமை யராய்ச் செவிடர்களாய், குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொல் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர். 108.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்
மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்
சொல்வதில் ஓர் மகிமை யில்லை
திறமான புலமை யெனில் வெளி நாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும். 109.

உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழி பெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழ் அமுதின் சுவை கண்டார்
இங்க மரர் சிறப்புக் கண்டார். 110.

## பாமாலை.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற பரமே
என்னரசே யான்புகலும் இசையும் அணிந்தருளே. 111

எண்ணாத மந்திரமே எழுதாத மறையே
ஏறாத மேல்நிலைநின் றிறங்காத நிறைவே
பண்ணாத பூசையிலே படியாத படிப்பே
பாராத பார்வையிலே பதியாத பதிப்பே
நண்ணாத மனத்தகத்தே நண்ணாத நலமே
நாடாத நாட்டகத்தே நடவாத நடப்பே
அண்ணா என் அப்பா என் அய்யா என் அரசே
அடியிணைக்கென் சொன்மாலை அணிந்து
மகிழ்ந்தருளே. 112.

கையாத தீங்கனியே கயவாத அமுதே
கரையாத கற்கண்டே புரையாத கரும்பே
பொய்யாத பெருவாழ்வே புகையாத கனலே
போகாத புனலேயுள் வேகாத காலே
கொய்யாத நறுமலரே கோவாத மணியே
குளியாத பெருத்தே ஒளியாத வெளியே
செய்யாத பேருதவி செய்தபெருந் தகையே
தெய்வ நடத் தரசேஎன் சிறுமொழிஏற்றருளே. 113.

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாய்க் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின் பொடியும்மிகக்கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலின் தேங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப் பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள்ளமுதே
அநித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத்தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கல் அணிந்து
அருளே. 114.

எல்லாம்செய் வல்ல தெய்வம் எங்குநிறை தெய்வம்
என்னுயிரில் கலந்தெனக்கே இன்ப நல்குதெய்வம்
நல்லார்க்கு நல்லதெய்வம் நடுவான தெய்வம்
நற்சபையில் ஆடுகின்ற நடராச தெய்வம்
கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் தெய்வம்
காரணமாம் தெய்வம் அருட் பூரணமாம் தெய்வம்
செல்லாத நிலைகளெல்லாம் செல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் ஆடுகின்ற தெய்வமதே தெய்வம். 115.

என் இதயக் கமலத்தே இருந்தருளும் தெய்வம்
என்னிரண்டு கண்மணிக்குள் இலங்குகின்ற தெய்வம்
பொன்னடியென் சென்னியிலே பொருந்தவைத்த தெய்வம்
பொய்யாத தெய்வம் இடர் செய்யாத தெய்வம்
அன்னியமல் லாத தெய்வம் அறிவான தெய்வம்
அவ்வறிவுக் கறிவாம் என் அன்பான தெய்வம்
சென்னியிலே செம்பொருளாய்த் திகழ்கின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 116.

...யா அச்சுக்கூடம், திருநெல்வேலி. 6—'29.